1992 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாடநூல் நிறுவனம் என்று அமைச்சர் அவர்கள் கூறியதனால் ஒரு பொதுவான கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அதற்கு அவரிடம் விடை இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை. பாடநூல் நிறுவனம் என்று சொன்னால் அதுபற்றி எல்லாமே கேட்க முடியாது. இந்தக் கேள்விக்குத் தொடர்புடைய துணை வினாவைக் கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜு : பாடநூல் நிறுவனத்திடமிருந்து அச்சடிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்ற புத்தகங்கள் அந்தக் காலக்கெடுவுக்குள் வந்து சேருவது கிடையாது. அதனால், குழந்தைகள் படிப்பு 3 மாதம், 6 மாதம் லேட் ஆகிவிடுகிறது. ஆகவே, அரசு, பாடநூல் நிறுவனத்தில் அச்சடிக்கும் புத்தகங்களை உடனடியாகப் பள்ளிகளுக்கு அனுப்ப முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியிலே இருந்த நிலைமைகளை மனதிலே வைத்துக்கொண்டு, இப்போது சரி பார்க்காமல் மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறார் என்று நினைக்கிறேன். இப்போது அந்தக் குறைகளை எல்லாம் நீக்கி விட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 284. திரு. தே. ஜனார்தனன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

284—

விழுப்புரத்தில் அரசு மகளிர் கலைக்கல்லூரி.

*1813 திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தை விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட விழுப்புரம்-வள்ளலார் மாவட்டம் என்று பிரித்ததன் காரணமாக இப்போது விழுப்புரம் மிகவும் விரைவாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதன் அடிப் படையிலே, அடுத்த ஆண்டிலேயாவது அரசு மகளிர் கலைக் கல்லூரி துவங்குகிற திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கலைக் கல்லூரிகள் தொடங்குவதை ஆதரிக்கின்ற நிலையிலே இன்றைய தினம் இல்லை. அதுவும் அரசின் செலவிலே ஆரம்பிக்கின்ற நிலையில் இல்லை. ஆகவே தனியார் யாராவது ஆரம்பிப் பதாக இருந்தால், அதுகுறித்து அரசு பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 285. திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

285—

அ.வ.அ. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பேருந்து வசதி.

* 5527 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு **விடை**யளிப்பாரா:

நாகப்பட்டினம்— காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடு துறை ஒன்றியம் மன்னம்பந்தல் அ.வ.அ. கல்லூரிக்கு காலை நேரங்களில் மாணவர்கள் செல்வதற்கு சிறப்புப் பேருந்து விட அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS